# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

பிரிவு : TNPSC Group VIIB & VIII தேர்வு

பாடம் : இந்து மதம்

பகுதி : <u>வேதங்கள்,தோத்திரம்,சாத்திரம்</u>

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வேதங்கள்

- இந்து மதத்தின் முக்கிய சமய நூல்களின் ஒன்றுதான் ”வேதம்” ஆகும்.
- வேதம் என்ற சொல்லுக்கு ”தாது” அல்லது ”வித்” எனப்பொருள்படும்.
- வித் என்றால் அறிவு எனப்படும்.
- தெய்வீக கருத்துக்களை தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருந்தால் அது மறையெனப் பெயர் பெற்றது.
- உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திற்கும் முக்கியமான சமய நூல் ஒவ்வொன்றுள்ளது.
- நமது இந்து மதத்திற்கு வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம், புராணம் எனப் பல நூல்கள் இருக்கின்றன.
- வேதம் என்ற சொல்லின் பகுதி வித் என்பதாகும். வித் என்றால் அறிவு , வேதம் என்பதற்கு அறிவுநூல் என்பது பொருள்.
- தெய்வீகமான கருத்துகளைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர்பெற்றது.
- ஆசிரியனிடம் கேட்டுத் தெளியவேண்டிய நூலாதலால் இதனைச் சுருதியெனவும் கூறுவர்.
- இதனை ரிக், யஜீர், சாமம், அதர்வணம் என நான்காக வியாசர் வகுத்துள்ளார்.

## வேதங்களின் வகைகள் (4 வகை)

- இந்து சமயத்திற்கு அடிப்படையானவை மூன்று வேதங்கள் ஆகும்.
- அதர்வணத்தைத் தீமை என்று கருதினார்கள். பிற்காலத்தில்தான் அது நான்காவது வேதமாகச் சேர்க்கப்பட்டது.
- வேதம் நான்கு வகைப்படும்:
    1. **ரிக் வேதம்**
    2. **யஜீர் வேதம்**
    3. **சாமம் வேதம்**
    4. **அதர்வணம் வேதம்**

## ரிக் வேதம்:

- **ரிக் என்பதற்கு "துதித்தல்" அல்லது "வழிபடல்" எனப் பொருள்படும்.**
- **இந்து சமயத்தின் அடிப்படையாகவும், நான்கு வேதத்தின் மிகப்பெரிய பழமையான நூலாகும்.**
- **சமஸ்கிருத மொழியில் அமைந்த சுலோகங்களின் தொகுப்பு பத்து மண்டலங்களைக் கொண்டது.**
- **இறைவனை அக்கினி என்ற பெயரால் அழைக்கப்படும் வேதம்.**
- **பிரம்மன், இந்திரனை பற்றி பாடப்படுவது பத்தாவது மண்டலம்.**
- **ரிக் வேதத்தின் முதன்மை கடவுள்கள் - அக்கினி, இந்திரன், சோமன்.**
- **லோபமுத்ரா ரிக் வேதகாலத்தில் வாழ்ந்தவர்.**
- இது ஆக்கப்பட்ட காலம் சரியாகக் கணிக்கப்பட முடியவில்லையானாலும் பொதுவாக கி.மு.1500 - கி.மு.1100 க்கும் இடையில் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது.
- 'ரிக்' என்றால் துதித்தல் என்று பொருளாகும். இதில் ஏழு சந்தங்களாவன, காயத்திரி, உஷ்ணிக், அனுஷ்டுப், பிரஹதி, விராட், திரிஷ்டுப், ஜகதி. இதில் 10 மண்டலங்கள், 64 அத்தியாயங்கள், 85 அனுவாகங்கள், 1028 சூக்தங்கள், 2024 வர்க்கங்கள், 10467 ரிக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- ஒன்று முதல் ஏழு மண்டலங்களில் இறைவன் அக்னி எனவும் பத்தாவது மண்டலத்தில் பிரம்மன், இந்திரன் எனவும் குறிக்கப்படுகிறார்.

## ரிக் வேதகாலத்தில் வாழ்ந்த முனிவர்கள்:

- **வசிஷ்டர், விசுவாமித்திரர், பரத்வாஜர், அகத்தியர், ஜமத்கனி, அத்ரி, கண்வமகரஷி, அபாலா(பெண் முனிவராவர்)**

## ரிக் வேதகால முக்கிய அரசர்கள்:

- திவோதாஸ், சுதாஸ், மனு, புருரவா, நகுநன், யயாதி, மாந்தாதா, புரு, ருசிக், திரிச்சு மற்றும் குசிகர்

## ரிக் வேதகால சமூக வாழ்க்கை:

- ரிக் வேதகாலத்தில் பெருஞ்செல்வமாக கருதப்படுவது- பசு, குதிரை மற்றும் ஆடு.
- ரிக் வேதகால மக்கள் அருந்தும் பானம் "சோமபானம்" ஆகும். (ரிக் வேதகாலத்தில் ஒன்பதாவது மண்டலத்தில் உள்ள 114 சூத்திரங்களும் சோமபானத்தைப் பற்றி குறிக்கும்)
- ரிக் வேதகாலத்தில்

| | | |
|---|---|---|
| கிராமத்தின் தலைவர் | - | கிராமணி |
| ராஜாவின் மகன் | - | ராஜபுத்திரன் |
| சமூகத்தலைவர் | - | குல்ப் மற்றும் விராஜபதி |
| நீதிபதி | - | கணபதி |

## ரிக் வேதகாலத்திய நதிகள்:

- தென் தமிழகத்தில் பாயும் நதியான சரஸ்வதி ஆறு(திருஷ்த்வதி) மற்றும் யமுனை ஆறு(கக்கர்) ஆகும்.
- ராவி ஆறு(பருஷ்ணி), சிந்து, ஜீலம், சட்லஜ்(சுதுத்ரி) அடங்கும்.
- ரிக் வேதகாலத்தில் சரஸ்வதியும், சிந்துவும் புனித நதிகளாக இருந்தன.
- ரிக் வேதத்தின் அமைந்த ஒரே உபநிடதம் "ஐத்ரேய உபநிடதம்" ஆகும்.

## யஜீர் வேதம்:

- **யஜீர் என்பதற்கு யாகம் எனப்பொருள்படும்.**
- **கிரியைகள், வேள்விகள் பற்றி அமைந்த வேதமாகும்.**
- **பிதர் கர்மம் பற்றி கூறப்பட்டுள்ளது**
- **அமாவாசை, பௌர்ணமி காலங்களில் செய்ய வேண்டிய வேள்விகளைப் பற்றி கூறப்பட்டுள்ளது.**

## யஜீர் வேதத்தின் பிரிவு:

1. **சுக்கில யஜீர் வேதம் - தோற்றுவித்தவர்- ஸ்ரீயோகீசுவரர்**
2. **கிருஷ்ண யஜீர் வேதம் - தோற்றுவித்தவர்- யாக்கியவல்கி**

### சுக்கில யஜீர் வேதம்:

- சுக்கில யஜீர் வேதம் முனிவர் ஸ்ரீயோகீசுவர யாக்கியவல்கியரால் தோற்றுவிக்கப்பட்டது எனவும் இதை யாக்கியவல்கியார் சூரிய பகவானிடமிருந்து அவர் சுற்றி வரும் வேகத்திலேயே சென்று நேரடியாக பெற்றார் எனவும் கூறப்படுகிறது.
- இது 15 சாகைகள் ( உட்பிரிவு) கொண்டது எனப்பட்டாலும் இரண்டு சாகைகள் மட்டுமே உள்ளன. அவையாவன வஜசனேயி மாத்தியந்தினியம், வஜசனேயி கான்வம்.

### கிருஷ்ண யஜீர் வேதம்:

- நான்கு சாகைகள் உள்ளன.
- அவையாவன -
  1) தைத்திரீய
  2) சம்ஹிதை,
  3) மைத்திராயனீ
  4) சம்ஹிதை
- மிகப்பிரபலமானது தைத்ரீய சம்ஹிதை ஆகும். இது ஏழு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- ஏனைய மூன்று சாகைகள் ஒவ்வொன்றும் அவற்றுடன் இணைந்த ஒரு பிராமணத்தையும் ஆரண்யகங்கள், உபநிடதங்கள், பிரதிசாக்கியங்கள் என்ற துணை நூல்களையும் கொண்டுள்ளன.

## சாம வேதம்:

- **இன்னிசை வடிவில் பாடப்பற்ற வேதமாகும்.**
- **சாம வேதத்தின் மொழிக்கு "காணங்கள்" ஆகும்.**
- 30 **அத்தியாயங்களை கொண்டுள்ளது.**
- **இந்த வேதத்தில் சாத்தோக்கியம் மற்றும் கேனம் என்ற இரு உபநிடதங்கள் உள்ளன.**
- **பாபத்தை நீக்கி பலனைக் கொடுக்கும் பாடல்கள் இதில் அமைந்திருக்கின்றன.**

## அதர்வணம் வேதம்:

- **இதில் மந்திரம் உச்சரிக்க வேண்டிய முறைகளையும் விரோதிகளின் அழிவின் பொருட்டுச் செய்ய வேண்டிய கிரியா முறைகளையும் பற்றி கூறப்பட்டுள்ளது.**
- **வேத சாரக்கிரியைகளையும் அனுஷ்டானங்களையும் பற்றிய தோத்திரங்களும் உள்ளன.**

## வியாசர்:

- வியாசம் என்ற சொல்லிற்கு பகுத்தல் என்று பொருளாகும். வியாசர் என்னும் சொல் பதவியைக் குறிக்க வந்தது. வியாசம் செய்பவர் வியாசர் என்று அழைக்கப்படுவார்.
- சதுர்யுகம்(4-யுகம்) = கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.
- துவாபரயுகம் வரையிலும் வேதங்கள் பிரிவுகள் ஏதுமின்றி ஒரே தொகுப்பாக விளங்கும். ஒவ்வொரு துவாபர யுகத்திலும் ஒரு மாமுனிவர் தோன்றி வேதங்களை நான்காகப் பிரிப்பார். அம்முனிவரே வியாசர் எனப்படுவார்.

## 71 சதுர் யுகங்கள் - 1 மன்வந்திரம்.:

- ❖ நாம் இருப்பது 28-ஆவது சதுர்யுகம் ஆகும். தற்பொழுது நடப்பது வைவசுவத மன்வந்திரம் ஆகும். இதுவரை 28 மாமுனிவர்கள் வியாசர் பதவியை வகித்துள்ளார்கள்.

- ❖ இந்த சதுர்யுகத்தில் பராசர முனிவரின் புதல்வரான கிருஷ்ணத்துவைபாயனர் வேதங்களைப் பிரித்ததால் வேதவியாசர் எனப் போற்றப்படுகிறார்.

| | |
|---|---|
| கிருதயுகம் | 1728000 ஆண்டுகள் |
| திரேதாயுகம் | 1296000 ஆண்டுகள் |
| துவாபரயுகம் | 864000 ஆண்டுகள் |
| கலியுகம் | 432000 ஆண்டுகள் |
| மொத்தம் (1 சதுர் யுகம்) | 4320000 ஆண்டுகள் |

- ❖ பிரம்மனின் ஆயுட்காலம் முடிந்தவுடன் பிரளயம் தோன்றி முடிந்தவுடன் ஒரு புதிய பிரம்மனுடன் ஒரு மனித வாழ்க்கைக் கணக்குப்படி 311,040 பில்லியன் வருடங்கள். மகாயுகம், வருடம், மாதம், நாள் அனைத்துமே சித்திரை மாதத் துவக்கத்திலிருந்தே கணக்கிடப்படுகிறது. இந்தக் காலக் கணக்கை 1500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்திய வானியல் மற்றும் கணிதவியல் அறிஞர் ஆர்யபட்டர் உறுதி செய்திருக்கிறார்.
- ❖ தற்போதைய பிரம்மாவின் வயது 51.
- ❖ மன்வந்திரங்களின் பெயர்கள் 14
- ❖ ஸ்வாயம்புவ, ஸ்வரோசிஷ்ட, உத்தம, தாமச, ரைவத, சைக்ஷா, வைவஸ்த, அரக சவர்நிக, தக்கஷ் சவர்நிக, ப்ரமஹா சவர்நிக, தர்ம சவர்நிக, ருத்ர சவர்நிக, இந்திரா சவர்நிக.

## சூக்தங்களின் நோக்கம்:

- தங்களுக்கு நல்ல உணவு, நல்ல பானம், நல்ல மழை, அதிகமான தானிய விளைச்சல், அதிக பால் தரும் பசுக்கள், யாகங்கள் செய்திட செல்வம், வேகமாகச் செல்லும் குதிரைகள், உறுதியான தேர்கள், நல்ல உடல் நலம், மன உறுதி, நல்ல வாக்கு, தங்களின் வெற்றி, எதிரிகளின் வீழ்ச்சி ஆகியவற்றிற்காக தேவர்களின் உதவி வேண்டி அவர்களைப் போற்றும் நோக்கில் அமைந்தவை.

## ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடவுள்கள்:

- முதன்மைக் கடவுள்கள் - அக்கினி, இந்திரன், சோமன்
- ஏனையோர் - மித்திரன், வருணன், உஷை, அஸ்வினி தேவர்கள், விஷ்ணு, உருத்திரன், பிரகஸ்பதி, தியாயுஸ், பிரிதிவி, சூரியன், வாயு, வசுக்கள், ஆதித்தர்கள், விஸ்வ தேவர்கள், சரஸ்வதி, விசுவகர்மா.

## ரிக் வேதத்தில் குறிப்பிடப்படும் பெண்களில் முக்கியமானவர்கள்:

- அதிதி, இந்திராணி, ஊர்வசி, கஷிவானின் மகள் கோஷா, தட்சிணா, யமீ, லோபமுத்ரா, மன்னன், சுதாஸின் மனைவிகளான தேவி மற்றும் சூர்யா.

## சமூக வாழ்க்கை:

- ரிக் வேதகால மக்கள் சிறிய அளவில் பயிர் செய்து வந்தாலும் பசுக்கள், குதிரைகள், ஆடுகள் ஆகியவற்றைதான் பெருஞ்செல்வமாக கருதினர்.
- வேதத்தில் அரிசி பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.
- அருந்தும் சிறப்பான பானம் சோமபானம் ஆகும்.

| | | |
|---|---|---|
| கிராமங்களின் தலைவர் | - | கிராமணி |
| ராஷ்டிரத்தின் தலைவர் | - | ராஜா, சாம்ராட், பதி, |
| ராஜாவின் மகன் | - | ராஜபுத்திரன் |
| சமூகத் தலைவர் | - | குல்ப், விரஜாபதி |
| நீதிபதி | - | கணபதி |

## ரிக்வேதத்தில் கூறப்பட்டுள்ள நதிகள்:

- பருஷ்ணி (ராவி ஆறு),
- அசிக்னி (செனாப் ஆறு),
- விபாஷ் (ஜீலம் ஆறு),
- சதுர்த்தி (சட்லஜ் ஆறு),
- திருஷ்த்வதி (சரஸ்வதி ஆறு),
- கக்கர் (யமுனை ஆறு).
- இன்று புனிதமாகக் கருதப்படும் கங்கை நதி வேதகாலத்தில் 'கிராத்' எனப்பட்டது. ஆரியர்களின் எதிரிகளான கிராதர்கள் வாழ்ந்த பகுதியைக் குறிப்பதாக 'கிராத்' என அழைத்தனர்.
- வேதகால மக்களுக்கு சரஸ்வதி நதியும், சிந்து நதியுமே புனித நதிகளாக இருந்தன.

## பிராமணம்:

- மாத்தியந்தினியம், கான்வம் இரண்டு உட்பிரிவுகளிலும் 'சதபத பிராமணம்' என்ற வேத தொகுப்பு உள்ளது.

## சாம வேதம்:

- இசை வடிவமாக விளங்கும் சாமவேதத்தின் வேதமொழிகளுக்கு கானங்கள் என்று பெயராகும்.
- பத்து கானங்கள் - தசதிகள்
- தசதிகளின் தொகுப்பு - அத்தியாயங்கள்
- அத்தியாயங்களின் தொகுப்பு - ஆர்ச்சிகம்
- இவ்வேதம் இரண்டு ஆர்ச்சிகங்களாகவும், 30 அத்தியாயங்களாகவும், 458 தசதிகளாகவும் வகுக்கப்பட்டுள்ளது.
- இதில் 1549 கானங்கள் உள்ளன. இந்த வேதத்தில் சாத்தோக்கியம், கேனம் என்ற இரு உபநிடதங்கள் உள்ளன.
- இதன் உபவேதம் இசைமாலையாகிய காந்தர்வம் ஆகும்.

## அதர்வண வேதம்:

- 731 பாடல்களைக் கொண்டு 20 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. உச்சாடனம், மாந்த்ரீகம் போன்றவற்றை தீய சக்திகளையும் எதிரிகளையும் வென்று உலகத்தில் வெற்றி பெறும் வழிகளை இவ்வேதம் கூறுகிறது.
- இதன் உபவேதம் சில்பவேதம் ஆகும். இது கட்டடக் கலையை விவரிக்கிறது.
- அதர்வண வேதத்தில் 5847 மந்திரங்கள் உள்ளன. இவை 733 வர்க்கங்களையும் 111 அனுவாகங்களையும் 34 ப்ரபாடங்களாகவும் 20 காண்டங்களாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.
- 9 சாகைகள் உடையது. அவற்றுள் பிபலாதம் மற்றும் சௌனகம் என்ற இரண்டு சாகைகள் மட்டுமே கிடைத்துள்ளன.
- இதனுடைய உபநிடதங்கள் முண்டகம், பிரசினம், மாண்டூக்யம் ஆகியனவாகும்.

## அங்க நூல்கள்:

### 1.வியாகரணம்:

- வேதத்தின் இலக்கணத்தை விவரிப்பதாகும் பாணிணி, பதஞ்சலி, காய்யாயனார் முதலியோர் வியாகரண விளக்க நூல்களை இயற்றியுள்ளனர்

### 2.சந்தஸ்:

- வேதத்தை இசைக்கும் முறையில் எழுத்துகளின் எண்ணிக்கையை விவரிப்பதாகும். வேதத்தில் காயத்ரி, உஷ்னிக், ஸ்னுஷ்டுப், ப்ருஹதீ, பங்தீ, த்ருஷ்டுப், ஜகதீ எனும் ஏழு சந்தங்கள் உள்ளன. இவை வேதத்தினை எப்படி ஏற்ற இறக்கங்களோடு ஓத வேண்டும் என்பதையும் வேதத்தின் ஒவ்வோர் அடியிலும் வர வேண்டிய எழுத்துகளின் எண்ணிக்கையையும் வரையறுக்கிறது. பிங்கர முனிவர் இதற்கு விளக்க நூலை எழுதியுள்ளார்.

## 3.ஜோதிடம்:

- வான சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு வருங்காலத்தை விளக்குவதாகும்.
- வேதங்களில் விளக்கப்பட்டுள்ள சாந்திகளையும் தானங்களையும் முறைப்படி உரிய காலத்தில் செய்ய வேண்டும்.
- அதற்குரிய காலத்தை நிர்ணயிக்க ஜோதிட நூல் உதவுகிறது. ஆதித்தன் பாஸ்கரபட்டர் இதற்கு விளக்க நூல் செய்துள்ளார்.

## 4.நிருத்தம்:

- வேத மொழிகளுக்கும் அவற்றின் ஒலிகளுக்கும் விளக்கம் கூறும் அகராதி போன்றதாகும்.
- இதன் மூலம் வேத வாக்கியங்களை உண்மைப் பொருளை அறிய முடிகிறது. இதற்குப் பாஸ்கரராயர் உரை எழுதியுள்ளார்.

## 5.கல்பம்:

- வேதங்கள் கூறும் மந்திரங்களின் அடிப்படையில் செய்ய வேண்டிய செயல்களை வகைப்படுத்தி கூறுவதாகும்.
- இவை ஸ்ரௌதம், கிருஹ்யம், தர்மம் என மூன்று வகைப்படும்.

## 6.சிட்சை:

- வேதமந்திரங்களில் உள்ள மந்திரச் சொற்களை உச்சரிக்கும் முறைகளை விளக்குவதாகும்.
- இதில் எழுத்து, ஸ்வரம், மாத்திராகாலம் முதலியன விளக்கப்பட்டுள்ளன. பாணிணி இதற்கான விளக்க நூல்களை எழுதியுள்ளார்.

## வேதங்களின் பாகங்கள்:

வேதங்களுக்கு நான்கு பாகங்கள் உள்ளன.

1. சம்ஹிதை - தொகுப்பு மந்திரங்கள்
2. பிராமணம் - உரை அல்லது சடங்கு வழிமுறைகள்
3. ஆரண்யம் - காட்டில் வாழும் முனிவர்களின் உரை
4. உபநிடதங்கள் - வேதங்களுக்கான தத்துவ உரைகள். இவை வேதத்தின் முடிவில் வரும் வேத அந்தம் ஆகும். வேதாந்தம் எனப்பொருள்படும்.

## வேதாந்தம்:

- வேதத்தின் முடிவு அல்லது வேதசாரத்தை குறிப்பதாகும்.
- 191 விஷயங்களை பற்றி 558 சூத்திரங்களால் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.
- இது நான்கு அத்தியாயங்களை கொண்டவையாகும்.
- அவை ஒவ்வொன்றும் 4 பாதங்களைக் கொண்டவையாகும்.
- இதனை பிரம்ம சூத்திரம் என்றும் அழைப்பர்.
- இது வேதவியாசரால் இயற்றப்பட்டது.
- சடங்குகளின் போது இசைப்பதற்காகவே பின்பற்றப்படுவதற்கான பல்வேறு விவரங்கள் யஜீர் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- சடங்குகளின் போது இசைப்பதற்காகவே சாம வேதம் இயற்றப்பட்டதாகும். இதிலிருந்து இந்திய இசை தோன்றியதாகக் கூறப்படுகிறது.
- வழிபாடுகள் மற்றும் வேள்விகள் குறித்த விளக்கங்கள் பிராமணங்களில் கூறப்பட்டுள்ளன.
- ஆன்மா, பிரம்மம், உலகின் தோற்றம், இயற்கை பற்றிய விளக்கங்களை உபநிடதங்கள் கூறுகின்றன.

# தோத்திரம்

## பன்னிரு திருமுறைகள்

- திருமுறை என்பதற்குத் தம்மை அடைந்தவர்களைச் சிவமேயாக்குகின்ற முறையெனப் பொருள் கூறலாம்.

| வ.எண் | ஆசிரியர்கள் | எழுதிய திருமுறைகள் |
|---|---|---|
| 01. | திருஞானசம்பந்தர் | தேவாரம் 1,2,3 திருமுறை |
| 02. | திருநாவுக்கரசு | தேவாரம் 4,5,6 திருமுறை |
| 03. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் | ஏழாம் திருமுறை |
| 04. | மாணிக்கவாசக சுவாமிகள் | திருவாசகம், திருக்கோவையார் எட்டாவது திருமுறை. |
| 05. | திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது பேர்கள் | திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை |
| 06. | திருமூலதேவ நாயனார் | திருமந்திரம் பத்தாம் திருமுறை |
| 07. | திருவாலவாயுடையார், காரைக்கலம்மையார் முதலிய பன்னிருவர் | பதினோராம் திருமுறை |
| 08. | சேக்கிழார் சுவாமிகள் | திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும்(அறுபத்து மூன்று நாயன்மார்களது வரலாறு கூறப்பட்டுள்ளது.) |

- முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும்.
- தே- தெய்வம் ஆரம்- மாலை எனவும் பொருள் கொண்டு தேவனுக்குரிய பாமாலை எனப் பொருள் கூறுவர்.
- தேவனிடத்தில் அன்பு செலுத்துவதற்குரிய நூல்.
- திருவாசகம் என்பது தெய்வத்தன்மையான நூல்.

- ”திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்” என்பது பழமொழி.
- திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யூ.போப்
- திருமுறைகளில் உள்ள சில பாடல்களைப் பொன்னம்பலம் ராமநாதன், பிலிப்ஸ், முதலியோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர்.

## நாலாயிரத் திவ்யபிரபந்தம் தோற்றம்

- கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டத்தில் வாழ்ந்த ஆழ்வார்கள் 12 பேரினால் இயற்றப்பட்ட பாடல்களை 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனிகள் என்பவர் தொகுத்தளித்துள்ளார். பின்னர் வந்த மணவாள முனிகள், நாதமுனிகள் தொகுத்த ஆழ்வார்களின் பிரபந்தங்களோடு திருவரங்கத்துமுதலினார் இயற்றிய இராமானுஜர் நூற்றந்தாதியையும் சேர்த்து நாலாயிரத் திவ்யபிரபந்தம் என அழைக்கும்படி அருளினார்.
- திவ்ய --- மேலான, பிரபந்தம்--- பலவகைப் பாடல்களின் தொகுப்பு.
- இந்நூல் ஆன்ற தமிழ்மறை, ஐந்தாவது வேதம், திராவிட வேதம், திராவிட பிரபந்தம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.
- இந்நூல் முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- வைணவ சமயத்தில், விஷ்ணுவை தமிழ்ப் பாமலைகளால் வழிபட்ட ஆழ்வார்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடி ஆழ்வார், குலசேகராழ்வார், திருமங்கை ஆழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவி ஆழ்வார், திருமழிசை ஆழ்வார் எனப் பன்னிருவராவர் அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பிய இவர்களது பாக்கள் மதுரம் பழுத்துத் தேன் துளிப்பனவாக படிப்பவர்களுக்குத் தெய்வீக உணர்வை ஊட்டுகின்றன.

# சாத்திரம்

- சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்காகும்.
- இயற்றியவர்கள் 6 பேர்.

> "உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
> பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தரவருட்
> பண்பு வினா போற்றிகொடி பாசமிலா
> நெஞ்சுவிடு உண்மை நெறி சங்கற்ப முற்று."

| வ.எண் | சாத்திரங்கள் | இயற்றியவர்கள் |
|---|---|---|
| 01. | திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார் |
| 02. | திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்தேவ நாயனார் |
| 03. | சிவஞானபோதம் | மெய்கண்ட தேவ நாயனார் |
| 04. | சிவஞான சித்தியார் | அருணந்தி சிவாசாரியார் |
| 05. | இருபா இருபது | அருணந்தி சிவாசாரியார் |
| 06. | உண்மை விளக்கம் | மனவாசகம் கடந்தார் |
| 07. | சிவப்பிரகாசம் | உமாபதி சிவம் |
| 08. | திருவருட்பயன் | உமாபதி சிவம் |
| 09. | வினாவெண்பா | உமாபதி சிவம் |
| 10. | போற்றிபஃறொடை | உமாபதி சிவம் |
| 11. | கொடிக்கவி | உமாபதி சிவம் |
| 12. | நெஞ்சுவிடு தூது | உமாபதி சிவம் |
| 13. | உண்மைநெறி விளக்கம் | உமாபதி சிவம் |
| 14 | சங்கற்ப நிராகரணம் | உமாபதி சிவம் |

- இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்பர்.
- இப்பதினான்கு சாத்திரங்களில் தலைசிறந்த சிவஞானபோதமாகும்.

## சிவஞானபோதம்:

- சிவம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருள். ஞானம் என்றால் அதனை அறிதல். போதம் என்றால் தெளிதல். சிவஞானம்போதம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய கடவுளை அறிந்து தெளிதலுக்குரிய நூல் எனப் பொருள்படும்.
- இது மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டது. இதில் பன்னிரண்டு சூத்திரங்கள் உள்ளன.
- பதி (1,2,6)
  - உண்மையினை முதல் சூத்திரம்
  - பொது இலக்கணத்தை 2-ம் சூத்திரம்
  - சிறப்பு இலக்கணத்தை 6-ம் சூத்திரம்
- பசு (3,4,7)
  - உண்மையினை 3ம் சூத்திரம்
  - பொது இலக்கணத்தை 4ம் சூத்திரம்
  - சிறப்பு இலக்கணத்தை 7ம் சூத்திரம்
- பாசம் (2,4,5)
  - உண்மையினை 2ம் சூத்திரம்
  - பொது இலக்கணத்தை 4ம் சூத்திரம்
  - சிறப்பு இலக்கணத்தை 5ம் சூத்திரம்
  - ஞானத்தினை உணரும் முறை - எட்டாம் சூத்திரம்
  - ஆன்மசுத்தியை - ஒன்பதாம் சூத்திரம்
  - பாசநீக்கத்தை - பத்தாம் சூத்திரம்
  - சிவப்பேற்றினை - பதினொன்றாம் சூத்திரம்
  - அணைந்தோர் தன்மையை - பன்னிரண்டாம் சூத்திரம்
- இதனை அடிப்படையாகக் கொண்டே ஏனைய சைவ சாத்திரங்க்ள அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன.
- சிவஞானபோதத்திற்கு பாண்டிப்பெருமாள் விருத்தி, சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானபோத மாபாடியம் எனும் உரைநூல்கள் உள்ளன.
- சிவஞானபாடியத்தை திராவிட மகாபாடியம் எனக் கூறுவர்.
- அப்பாடியம் விக்கிரமசிங்கபுரத்தில் உள்ளவரும், திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவருமான மாதவச் சிவஞான சுவாமிகளால் எழுதப்பட்டது.

## சிவஞானபோதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள்:

- ஹாய்சிங்டன்
- பையட்பாதிரியார்
- கார்டன் மாத்யூஸ்
- நல்லசாமிப்பிள்ளை
- டேவிட் நவமணி நாடார்
- சிவபாத சுந்தரம்

## சிவஞான சித்தியார்:

- சிவஞானபோதத்துக்கு அடுத்தபடியாகத் திகழ்வதும் சிவஞானபோதத்தைத் தழுவி எழுதப்பட்டதும் ஆகிய பெருநூல் சிவஞான சித்தியார் என்பதாகும்.
- இதனை இயற்றியவர் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.
- இவர் மெய்கண்டாரின் தந்தையின் குரு.ஆயினும் மெய்கண்டாரின் மாணவரானார்.
- சித்தியார் சுபபக்கம், பரபக்கம் என இரு பிரிவுகள் கொண்டது.
- சுபபக்கம் உரை எழுதியவர்கள்.
    - சிவஞான யோகியார்.
    - திருவாவடுதுறை ஆதீனத்தில் பதினாறாம் பட்டத்தில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்.
    - அழகிய தேசிகர்
    - மறைஞான தேசிகர்
    - சிவாக்கிரயோகி ஞானப் பிரகாசர்
- பரபக்கத்திற்கு உரை எழுதியவர் தத்துவப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்
- சித்தியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள்
    - பெரும்பகுதிகளை டாக்டர் கிராண்ட்
    - நல்லசாமிப் பிள்ளை
    - சிவராமன்
- பி.டி. ஜெயின் என்பவர் இந்தி மொழியில் வெளியிட்டிருக்கிறார்.

இருபா இருபது:

- குருவுக்கும் மாணவனுக்கும் உள்ள சமபாடணை முறையில் சைவசித்தாந்தக் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

**திருவுந்தியார்**

- முத்திமார்க்கம் நன்கு விளக்கப்பட்டுள்ளது.
- இதனை தழுவி வெளிவந்ததே திருக்களிற்றுப்பழயாராகும்.

உண்மைவிளக்கம்

- மனவாசகம் கடந்தார் இயற்றிய இந்நூல் சித்தாந்த உண்மைகளை நன்கு விளக்குகிறது.

**உமாபதி சிவாசாரியார் நூல்கள்**

உமாபதி சிவாசாரியார் இயற்றியவை ஏனைய எட்டு நூல்களுமாகும்.

1. **சிவப்பிரகாசம்**

   - சிவஞானபோதத்தின் சார்பு நூலாகும்.
   - சைவ நூல்களின் இயல்பும், தீட்சை வகைகளும் இதில் கூறப்பட்டுள்ளன.
   - பொது, சிறப்பு என இருவகைப்படும்.
   - நூறு விருத்தங்களால் ஆகியது.
   - பசு, பதி, பாச இலக்கணம் நன்கு இதில கூறப்பட்டுள்ளது.

2. திருவருட்பயன்:

   - திருக்குறள் போன்று குறள் வெண்பாக்களால் ஆகியது.
   - பத்து அதிகாரங்களை உடையது.
   - நூறு பாக்களை கொண்டது.

3. <u>வினாவெண்பா:</u>

- 13 பாக்களாலாகியது.
- ஆசிரியர் தம் குருநாதராகிய மறைஞான சம்பந்தரிடம் சாத்திர உண்மைகளை வினவும் முறையில் எழுதப்பட்டது.

4. <u>போற்றிப் ப:ஃறொடை:</u>

- தமக்கு சிவஞானம் நல்கிய குருமூர்த்தியை வாழ்த்திய பாடல்கள் அடங்கியவை.

5. <u>கொடிக்கவி:</u>

- சில மந்திரங்களின் இயல்மை உணர்த்துவது.
- ஏறாத தில்லைக்கொடியை ஏற்றியது.

6. <u>நெஞ்சுவிடு தூது:</u>

- ஆசிரியர் தம் குருவிடம் மாலை வாங்கிவரும்படி தனது நெஞ்சை தூது விடும் முறையில் பாடப்பட்டது.

7. <u>உண்மை நெறி விளக்கம்:</u>

- முற்கூறிய தசகாரியங்களை விளக்குவது.

8. <u>சங்கற்ப நிராகரணம்:</u>

- சமயக் கொள்கைகளைக் கூறி வேற்றுச் சமயக் கொள்கைகளின் வேறுபாடுகளை விளக்குவது.

------****-----****----